GANGA GUIDE

பாடத்திட்டக் கையேடு

தமிழ்

வகுப்பு

6 7 8

மூன்றாம் பருவம்

SRI GANGA PUBLICATIONS ®
(A unit of **Shyamala** Group)

No. 1, Sugar Mill Colony,
Salai Kumaran illam,
Madurai Road,
Tirunelveli - 627 001.

Phone : 0462 - 2338899, 2338484.
Mobile : 94431-58484,
94421-58484,
94425-58484.

E-mail: suryaguides@yahoo.com
website : www.suryapublications.in

Price: ₹ 100/-

Published By
B. ARUMUGAM
SRI GANGA PUBLICATIONS
(A unit of ***Shyamala*** *Group)*

OUR BANK DETAILS

Account Name	:	**Surya Publications**
Account Number	:	446971431
Bank Name	:	Indian Bank
IFSC Code	:	IDIB000T034
Branch Name	:	Tirunelveli Junction

Account Name	:	**Surya Publications**
Account Number	:	510909010051752
Bank Name	:	City Union Bank
IFSC Code	:	CIUB0000230
Branch Name	:	Palayamkottai

அறிமுகவுரை

நல்ல நூல்கள் சிறந்த வழிகாட்டி

சிறந்த வழிகாட்டி நல்லாசிரியர்கள்

நல்லாசிரியர்கள் நாளைய பாரதத்தை உருவாக்கும் சிற்பிகள்

நாளைய பாரதத்தை உருவாக்கும் சிற்பிகளுக்கு உற்ற துணையாகக் கற்பித்தல் பணிக்கு உதவும் வகையில் **ஸ்ரீ கங்கா பப்ளிகேஷன்ஸ்** பாடத்திட்டக் கையேட்டை உருவாக்கியுள்ளது.

எளிமை, இனிமை, புதுமை எனும் நோக்கில் இக் கையேடு புதிய பாடத்திட்டத்திற்கு ஏற்ப வடிவமைக்கப்பட்டுள்ளது. உயர் சிந்தனை, நடுத்தர சிந்தனை, எளிய சிந்தனை வினாக்கள் ஆகியன மதிப்பீட்டில் வழங்கப்பட்டுள்ளது இதன் சிறப்பம்சமாகும்.

புதிய நெறிமுறைகளின்படி கற்றல்-கற்பித்தல் திட்ட படிநிலைகள் இக் கையேட்டில் அமைக்கப்பட்டுள்ளது. தமிழ் ஆசிரியர்களுக்கு உற்ற துணைவனாக இந்நூல் விளங்கும் என்பதில் ஐயமில்லை.

பதிப்பகத்தார்

பொருளடக்கம்

வகுப்பு 6

இயல்		பாடத்தலைப்பு	பக்க எண்
1	கவிதைப்பேழை	பாரதம் அன்றைய நாற்றங்கால்	1
	உரைநடை உலகம்	தமிழ்நாட்டில் காந்தி	5
	விரிவானம்	வேலுநாச்சியார்	9
	கற்கண்டு	நால்வகைச் சொற்கள்	13
2	கவிதைப்பேழை	பராபரக் கண்ணி	17
	கவிதைப்பேழை	நீங்கள் நல்லவர்	21
	உரைநடை உலகம்	பசிப்பிணி போக்கிய பாவை	25
	விரிவானம்	பாதம்	29
	கற்கண்டு	பெயர்ச்சொல்	32
	வாழ்வியல்	திருக்குறள்	36
3	கவிதைப்பேழை	ஆசியஜோதி	40
	உரைநடை உலகம்	மனிதநேயம்	44
	விரிவானம்	முடிவில் ஒரு தொடக்கம்	48
	கற்கண்டு	அணி இலக்கணம்	51

வகுப்பு 7

இயல்		பாடத்தலைப்பு	பக்க எண்
1	கவிதைப்பேழை	விருந்தோம்பல்	55
	கவிதைப்பேழை	வயலும் வாழ்வும்	59
	உரைநடை உலகம்	திக்கெல்லாம் புகழுறும் திருநெல்வேலி	63
	விரிவானம்	திருநெல்வேலிச் சீமையும் கவிகளும்	68
	கற்கண்டு	அணி இலக்கணம்	71
2	கவிதைப்பேழை	புதுமை விளக்கு	75
	கவிதைப்பேழை	அறம் என்னும் கதிர்	79
	உரைநடை உலகம்	ஒப்புரவு நெறி	83
	விரிவானம்	உண்மை ஒளி	88
	கற்கண்டு	அணி இலக்கணம்	92
	வாழ்வியல்	திருக்குறள்	96
3	கவிதைப்பேழை	மலைப்பொழிவு	100
	கவிதைப்பேழை	தன்னை அறிதல்	104
	உரைநடை உலகம்	கண்ணியமிகு தலைவர்	108
	விரிவானம்	பயணம்	113
	கற்கண்டு	ஆகுபெயர்	117

வகுப்பு 8

இயல்		பாடத்தலைப்பு	பக்க எண்
7	கவிதைப்பேழை	படை வேழம்	123
	கவிதைப்பேழை	விடுதலைத் திருநாள்	127
	உரைநடை உலகம்	பாரத ரத்னா எம்.ஜி.இராமச்சந்திரன்	131
	விரிவானம்	அறிவுசால் ஔவையார்	135
	கற்கண்டு	வல்லினம் மிகும் இடங்களும் மிகா இடங்களும்	139
8	கவிதைப்பேழை	ஒன்றே குலம்	142
	கவிதைப்பேழை	மெய்ஞ்ஞான ஒளி	145
	உரைநடை உலகம்	அயோத்திதாசர் சிந்தனைகள்	149
	விரிவானம்	மனித யந்திரம்	154
	கற்கண்டு	யாப்பு இலக்கணம்	157
	வாழ்வியல்	திருக்குறள்	161
9	கவிதைப்பேழை	உயிர்க்குணங்கள்	165
	கவிதைப்பேழை	இளைய தோழனுக்கு	169
	உரைநடை உலகம்	சட்டமேதை அம்பேத்கர்	173
	விரிவானம்	பால் மனம்	178
	கற்கண்டு	அணி இலக்கணம்	181

GANGA GUIDE

6 ஆம் வகுப்பு

தமிழ்

பாடத்திட்டக் கையேடு

மூன்றாம் பருவம்

இயல் 1

பாடத்திட்டக் கையேடு

கவிதைப்பேழை: பாரதம் அன்றைய நாற்றங்கால்

- தாராபாரதி

- **இயல்** : ஒன்று (கண்ணெனத் தகும்)
- **பாடத்தின் தன்மை** : இந்தியாவின் சிறப்பினை மட்டும் விளக்குவதால், தனித்த வகையைச் சார்ந்தது.
- **கற்கும் முறை** : ஆசிரியர் பாடலைப் பாட அதனைக் கேட்டு மாணவர்கள் தானே கற்றல்.

துணைக் கருவிகள்

- தாராபாரதி கவிதைகள் – நூல்
- விளக்கப்படம்
- ஒலிபெருக்கி

பாட அறிமுகம்

‘தாராபாரதி குறித்து நீவிர் அறிந்த செய்தியைக் கூறுக’ என்ற வினாவினை மாணாக்கர்களிடம் கேட்டு, அவ்விடைகளின் வழியே பாட அறிமுகம் செய்தல்.

வாசித்தல்

நூல்வெளிப் பகுதியினை ஆசிரியர் வாசித்துக் காட்ட மாணாக்கர்கள் தனித் தனியே வாசித்தல் மேற்கொள்ளுதல்.

கற்றல் திறன்கள்

- புதியச் சொற்களை அடிக்கோடிடல்.
- அகராதி கொண்டு பொருள் அறிந்து எழுதுதல்.

மனவரைபடம்



தொகுத்தல்

- பூமியின் கிழக்கு வாசலாகத் திகழும் நமது இந்திய நாடு பல புதுமைகளைச் செய்த நாடு. திருக்குறள் ஆடையாக விளங்குகிறது. இந்தியத் தாய்க்கு மெய்யுணர்வே மேலாடையாக விளங்குகின்றது.
- காளிதாசர் இயற்றிய இனிமையான பாடல்கள் காவிரிக்கரை வரை எதிரொலிக்கின்றன. கம்பரின் அமுதம் போன்ற கவிதை வரிகளுக்குக் கங்கை ஆற்றின் அலைகள் இசையமைக்கின்றன. குமரிமுனை ஆகிய கன்னியின் கூந்தலுக்காகக் காஷ்மீரத்து மலர்கள் மாலையாகத் தொடுக்கப்படுகின்றன.
- மேற்கே தோன்றும் நதிகள் கிழக்கு எல்லை வரை பாய்ந்து நன்மைகளை விளைவிக்கின்றன. புல்வெளிகள் எல்லாம் பூக்கள் மலர்ந்து பொற்காலமாகப் புன்கை புரிகின்றன. கல்லில் செதுக்கிய சிற்பங்கள் யாவும் காவியக் கலைக்கூட்டமாகக் காட்சி தருகின்றன.

வழங்குதல்

மனவரைபடக் கருத்துகளை குழுவினில் வழங்கி, ஒட்டு மொத்த தொகுத்தல் செய்தல்.

வலுவூட்டல்

விரைவுக் குறியீடு மூலம் மடிக்கணினி மூலம் பாடல் காட்சிகளைக் காட்டி, பாடத்தை வலுவூட்டுதல்.

மதிப்பீடு

மாணாக்கர் திறன் அறிய சில வினாக்கள் கேட்டல்.

- **உயர் சிந்தனை வினா (HOT):**
  - ★ இந்திய நாட்டின் வளங்கள் யாவை?
  - ★ இந்தியா செழித்த பூமி என்பதை விளக்குக.
- **நடுத்தர சிந்தனை வினா (MOT):**
  - ★ தாராபாரதியின் படைப்புகள் யாவை?
  - ★ இந்தியாவின் ஆடைகள் யாவை?
- **எளிய சிந்தனை வினா** (LOT)
  - ★ கவிஞாயிறு என்னும் அடைமொழி பெற்றவர் யார்?
  - ★ தாராபாரதியின் இயற்பெயர் யாது?

குறைதீர் கற்றல்

மெல்ல அரும்பும் மாணாக்கர்களுக்குப் பாடலையும் பொருளினையும் கற்பித்துத் தனியே பயிற்சி அளித்தல்.

எழுதுதல்

- சொல்வதை எழுதுதல்.
- பாடநூல் மதிப்பீட்டு வினாக்கள் எழுதுதல்.

கற்றல் விளைவுகள்

தாராபாரதியின் பாடல் வழி பாரதத்தின் சிறப்புகளை மாணவர்கள் அறிந்து கொண்டனர்.

தொடர்பணி

- தாராபாரதியின் படைப்புகளைப் பட்டியலிட்டு வரச்சொல்லுதல்.
- இந்தியா பற்றிய பிற கவிதைகளை அறிந்து எழுதி வரச்சொல்லுதல்.

மனவரைபடம்

பராபரக் கண்ணி

அனைத்து உயிர்களையும் தம் உயிர்போல் கருதும் கருணை மிகுந்த சான்றோாக்குத் தொண்டு செய்.

அன்பர்களுக்குத் தொண்டு செய்பவராக ஆக்கிவிட்டால் இன்பநிலை தானே வரும்.

எல்லாரும் இன்பமாக வாழ வேறு எதையும் நினைக்க மாட்டேன்.

தொகுத்தல்

- அனைத்து உயிர்களையும் தம் உயிர்போல் கருதும் கருணை மிகுந்த சான்றோாக்குத் தொண்டு செய்ய வேண்டும்.
- அன்பர்களுக்குத் தொண்டு செய்பவராக என்னை ஆக்கிவிட்டால் போதும் இன்பநிலை தானே வந்து சேரும்.
- எல்லாரும் இன்பமாக வாழ வேண்டும். அதைத்தவிர, வேறு எதையும் நினைக்க மாட்டேன் என்று தாயுமானவர் வேண்டுகிறார்.

வழங்குதல்

மனவரைபடக் கருத்துகளை குழுவினில் வழங்கி, ஒட்டு மொத்த தொகுத்தல் செய்தல்.

வலுவூட்டல்

விரைவுக் குறியீடு கொண்டு மடிக்கணினி மூலம் பாடல் காட்சிகளைக் காட்டி, பாடத்தை வலுவூட்டுதல்.

மதிப்பீடு

மாணாக்கர் திறன் அறிய சில வினாக்கள் கேட்டல்.

- **உயர் சிந்தனை வினா (HOT)**
  - ★ பராபரக் கண்ணியில் தாயுமாயுமானவர் கூறுவன யாவை?
- **நடுத்தர சிந்தனை வினா (MOT)**
  - ★ பராபரக் கண்ணி பற்றிக் கூறுக.
- **எளிய சிந்தனை வினா (LOT)**
  - ★ யாருக்குத் தொண்டு செய்ய வேண்டும்?
  - ★ இன்பநிலை எப்போது வரும்?

குறைதீர் கற்றல்

மெல்ல அரும்பும் மாணாக்கர்களுக்குப் பாடலையும் பொருளினையும் மீண்டும் கற்பித்துத் தனியே பயிற்சி அளித்தல்.

எழுதுதல்

- சொல்வதை எழுதுதல்.
- பாடநூல் மதிப்பீட்டு வினாக்கள் எழுதுதல்.

கற்றல் விளைவுகள்

தாயுமானவர் பாடல் வழி சமுதாயத் தொண்டு மாணவர்கள் அறிந்து கொண்டனர்.

தொடர்பணி

தாயுமானவர் வாழ்க்கை வரலாறை அறிந்து
எழுதி வரச் சொல்லுதல்.

வளரறி மதிப்பீடு (அ)

- பாடலைச் சந்த நயத்துடன் பாடுதல்.
- கண்ணியில் அமைந்த பிற பாடல்களை எழுதி வருதல்.

வளரறி மதிப்பீடு (ஆ) - வினாத்தாள்

காலம்: 15 நிமிடம் மதிப்பெண்: 10

அ. பொருள் கூறுக. (6)

1. கூர் -
2. பாராபரம் -
3. பணி -
4. தண்டருள் -
5. செம்மையர் -
6. ஏவல் -

ஆ. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (4)

1. 'தம் + உயிர்' என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் -----.

அ) தம்முயிர் ஆ) தமதுயிர்
இ) தம்உயிர் ஈ) தம்முஉயிர்

2. 'இன்புற்று + இருக்க' என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் -----.

அ) இன்புற்றிருக்க ஆ) இன்புறுறிருக்க
இ) இன்புற்றுஇருக்க ஈ) இன்புறுஇருக்க

3. 'தானென்று' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது -----.

அ) தானே + என்று ஆ) தான் + என்று
இ) தா + னென்று ஈ) தான் + னென்று

4. சோம்பல் என்னும் சொல்லுக்குரிய பொருத்தமான எதிர்ச்சொல் -----.

அ) அழிவு ஆ) துன்பம்
இ) சுறுசுறுப்பு ஈ) சோகம்

★★★★★

கவிதைப்பேழை: நீங்கள் நல்லவர்

- கலீல் கிப்ரான்

✦ **பாடத்தின் தன்மை** : வாழ்க்கை முறையை விளக்குவதால், தனித்த வகையைச் சார்ந்தது.

✦ **கற்கும் முறை** : ஆசிரியர் பாடலைப் பாட அதனைக் கேட்டு மாணவர்கள் தானே கற்றல்.

துணைக் கருவிகள்

➢ தீர்க்கதரிசி – நூல்
➢ விளக்கப்படம்
➢ ஒலிபெருக்கி

பாட அறிமுகம்

➢ கலீல் கிப்ரான் லெபனான் நாட்டைச் சார்ந்தவர்.
➢ கவிஞர், புதின ஆசிரியர், கட்டுரையாசிரியர், ஓவியர் எனப் பன்முக ஆற்றல் கொண்டவர்.
➢ அவர் பாடல்களை கவிஞர் புவியரசு மொழிபெயர்த்துள்ளார்.

வாசித்தல்

நூல்வெளிப் பகுதியினை ஆசிரியர் வாசித்துக் காட்ட மாணாக்கர்கள் தனித்தனியே வாசித்தல் மேற்கொள்ளுதல்.

கற்றல் திறன்கள்

➢ புதியச் சொற்களை அடிக்கோடிடல்.
➢ அகராதி கொண்டு பொருள் அறிந்து எழுதுதல்.

மனவரைபடம்

வாழ்க்கை பின் செல்லாது.
நேற்றுடன் ஒத்துப்போகாது.
கொடுப்பவரின் பரிசுடன் எழுங்கள்.
சிறகுகளின் மீது எழுவது போல.
உழைக்கும் போது நீங்கள் புல்லாங்குழல்.

நீங்கள் நல்லவர்

இதயம் காலத்தின் கிசுகிசுப்பை ஒரு இசையாக மாற்றல் - உங்களுக்குள் இருக்கும் நன்மை நான் பேச முடியும்.தீமையை பேச முடியாது.
உங்கள் சுயத்துடன் நீங்கள் ஒருமைப்பாடு - நீங்கள் நல்லவர் என்னைப்போல் இரு.

கொடுப்பது பழத்தின் இயல்பு.
பெறுவது வேரின் இயல்பு.
உங்கள் பேச்சின் போது நீங்கள் விழிப்புணர்வுடன் இருப்பது நல்லது.

தொகுத்தல்

- வாழ்க்கை பின் திரும்பிச் செல்லாது. நேற்றுடன் ஒத்துப்போகாது.
- கொடுப்பவரின் பரிசுடன் அவருக்குச் சமமாக எழுங்கள். சிறகுகளின் மீது எழுவது போல.
- உழைக்கும் போது நீங்கள் புல்லாங்குழலாகி விடுகிறீர்கள். அதன் இதயம் காலத்தின் கிசுகிசுப்பை ஒரு இசையாக மாற்றி விடுகிறது.
- உங்களுக்குள் இருக்கும் நன்மையைப் பற்றித்தான் நான் பேச முடியும்.தீமையைப் பற்றி பேச முடியாது.
- உங்கள் சுயத்துடன் நீங்கள் ஒருமைப்பாடு கொண்டிருக்கும் போது நீங்கள் நல்லவர். என்னைப்போல் இரு. பழுத்து உன் உள்ளீடுகளையெல்லாம் முழுசாய்க் கொடு என்று பழம் வேரைப் பார்த்து நிச்சயமாகச் சொல்லாது.

- ஏனெனில், கொடுப்பது பழத்தின் இயல்பு, பெறுவது வேரின் இயல்பு. உங்கள் பேச்சின் போது நீங்கள் விழிப்புணர்வுடன் இருப்பது நல்லது.
- உறுதியாகக் கால்பதித்து உங்கள் குறிக்கோளை நோக்கி நடக்கையில் நீங்கள் நல்லவர்.

வழங்குதல்

மனவரைபடக் கருத்துகளை குழுவினில் வழங்கி, ஒட்டு மொத்த தொகுத்தல் செய்தல்.

வலுவூட்டல்

விரைவுக்குறியீடு கொண்டு மடிகணினி மூலம் பாடல் காட்சிகளைக் காட்டி, பாடத்தை வலுவூட்டுதல்.

மதிப்பீடு

மாணாக்கர் திறன் அறிய சில வினாக்கள் கேட்டல்.

- **உயர் சிந்தனை வினா (HOT)**
  - ★ நல்லவர் என்ற பெயர் பெற நாம் என்ன செய்யலாம்?
  - ★ உங்கள் குறிக்கோளை அடைய நீங்கள் செய்யும் முயற்சி யாது?
- **நடுத்தர சிந்தனை வினா (MOT)**
  - ★ கலில் கிப்ரான் என்பவர் யார்?
- **எளிய சிந்தனை வினா (LOT)**
  - ★ பழம் , வேர் ஆகியவற்றின் இயல்பு யாது?
  - ★ உழைக்கும் போது என்னவாக ஆகிறோம்?

குறைதீர் கற்றல்

மெல்ல அரும்பும் மாணாக்கர்களுக்குப் பாடலையும் பொருளினையும் மீண்டும் கற்பித்துத் தனியே பயிற்சி அளித்தல்.

எழுதுதல்

- சொல்வதை எழுதுதல்.
- பாடநூல் மதிப்பீட்டு வினாக்கள் எழுதுதல்.

கற்றல் விளைவுகள்

கலீல் கிப்ரான் பாடல் வழி வாழ்க்கை முறையை மாணவர்கள் அறிந்து கொண்டனர்.

தொடர்பணி

- கலீல் கிப்ரான் வாழ்க்கை வரலாறை அறிந்து எழுதி வரச் சொல்லுதல்.
- கலீல் கிப்ரான் அவர்களின் பிற கவிதைகளை அறிந்து எழுதி வரச்சொல்லுதல்.

வளரறி மதிப்பீடு (அ)

- பாடலைச் சந்த நயத்துடன் பாடுதல்.
- கலீல் கிப்ரான் பாடல் நூலில் உள்ள பிற பாடல் எழுதி வருதல்.

வளரறி மதிப்பீடு (ஆ) - வினாத்தாள்

காலம்: 15 நிமிடம் மதிப்பெண்: 10

அ. பொருள் கூறுக. **(2)**

1. சுயம் -
2. உள்ளீடுகள் -

ஆ. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. **(2)**

1. பரிசு பெறும் போது நம் மனநிலை ------ ஆக இருக்கும்.
   அ) கவலை ஆ) துன்பம் இ) மகிழ்ச்சி ஈ) சோர்வு
2. வாழ்வில் உயர கடினமாக ------ வேண்டும்.
   அ) பேச ஆ) சிரிக்க இ) நடக்க ஈ) உழைக்க

இ. கோடிட்ட இடத்தை நிரப்புக. **(6)**

1. கலீல் கிப்ரான் ------ நாட்டைச் சேர்ந்தவர்.
2. கலீல் கிப்ரான் பாடல்களை மொழிபெயர்த்தவர் ------.
3. தீர்க்கதரிசி நூலை மொழிபெயர்த்தவர் ------.
4. ------ பின் திரும்பச் செல்லாது.
5. ------ பழத்தின் இயல்பு.
6. ------ நோக்கி நடந்தால் நீங்கள் நல்லவர்.

★★★★★

இயல் 2

உரைநடை உலகம்: பசிப்பிணி போக்கிய பாவை

(நாடகம்)

- **பாடத்தின் தன்மை** : மணிமேகலை பற்றிய பல்வேறு செய்திகளை விளக்குவதால், மைசிந்தும் வகையைச் சார்ந்தது.
- **கற்கும் முறை** : உரைப்பத்தியைக் குழுவாகப் படித்து அறிந்து, மாணவர்கள் குழுவாகக் கற்றல்.

துணைக் கருவிகள்

- மணிமேகலை – நூல்
- விளக்கப்படம்
- மின்னட்டைகள்

பாட அறிமுகம்

கோவலன் – மாதவியின் மகள் மணிமேகலை – பசியால் வாடுவோர் துன்பம் களைய பசித்தோர்க்கு உணவிட்ட பசிப்பிணி மருத்துவர்.

வாசித்தல்

உரைப் பகுதியினை ஆசிரியர் வாசித்துக் காட்ட மாணாக்கர்கள் தனித்தனியே வாசித்தல் மேற்கொள்ளுதல்.

கற்றல் திறன்கள்

- புதியச் சொற்களை அடிக்கோடிடல்.
- அகராதி கொண்டு பொருள் அறிந்து எழுதுதல்.
- மையக்கருத்தை அறிதல்.

மனவரைபடம்

மணிமேகலை

- மணிபல்லவத் தீவு – மணிமேகலை, தீவதிலகை. கோமுகிப்பொய்கை – அட்சய பாத்திரம்.
- அறவணடிகள் சந்திப்பு – ஆபுத்திரன் வரலாறு – ஆதிரையிடம் முதல் பிச்சை.
- சிறையை மணிமேகலை அறக்கோட்டமாக்குதல்.
- ஆதரவற்றோர், மாற்றுத்திறனாளிகளுக்கு உணவளித்தல்.

தொகுத்தல்

- கோமுகிப் பொய்கையை வலஞ்செய்து வணங்க, அமுதசுரபி மணிமேகலையிடம் வந்து சேர்கிறது.
- அமுதசுரபியில் இடும் அன்னம் எடுக்க எடுக்கக் குறையாது பெருகும் என்று அதன் சிறப்பினைத் தீவதிலகை மணிமேகலைக்கு எடுத்துரைக்கிறாள்.
- தீவதிலகையின் அறிவுரைப்படி மணிமேகலை அமுதசுரபி பெற்று மீண்டும் புகார் நகருக்கு வருகிறாள்.
- சுதமதியுடனும் அறவண அடிகளைச் சந்திக்கிறாள். அவர் அவளுக்கு ஆபுத்திரன் கதையை எடுத்துரைக்கிறார்.
- ஆதிரையிடம் முதல் பிச்சை பெறுகிறாள். உணவளிக்கும் அறப்பணியைத் தொடங்கினாள்.
- சிறைச்சாலைக்குச் சென்று கைதிகளுக்கு உணவளிக்கிறாள். அரசன், இவள் அறிவுரையைக் கேட்டுச் சிறைச்சாலையை அறச்சாலையாக ஆக்குகிறான்.

வழங்குதல்

மனவரைபடக் கருத்துகளை குழுவினில் வழங்கி, ஒட்டு மொத்த தொகுத்தல் செய்தல்.

மனவரைபடம்

ஆசிய ஜோதி

அழிப்பது எளியது.
உயிர் கொடுப்பது எவராலும் முடியாது.
இரக்கம் ஆட்சி செய்யும்.

உயிரிரக்கமே நேர்மையான வாழ்வு. அறியாதவர் உயிர்களை வருத்தி, தாமும் வருந்துவர்.

‘ஆடு, தன் குட்டியை வருத்தி மக்களுக்குப் பால் தரல்’. இது தீய செயலா?

பாவம் செய்து ஆட்டை கொல்வதால் பாவம் நீங்குமா? தீய செயல் செய்யாமல் உயிர்களைக் கொல்லாமல் வாழுங்கள்.

தொகுத்தல்

- உயிர்களை அழிப்பது எளியது, உயிர் கொடுப்பது எவராலும் முடியாது.
- இரக்கம் உலகை ஆட்சி செய்யும். உயிரிரக்கமே நேர்மையான வாழ்வு. இதை அறியாதவர் பிற உயிர்களை வருத்தி, தாமும் வருந்துவர்.
- காடு மலை மேய்ந்து வரும் ஆடு, தன் குட்டியை வருத்தி மக்களுக்குப் பால் தருகிறது. இது தீய செயலா?
- ஆடுகளும் உங்களை நம்பி இருக்கும் உயிர் தான்.
- பாவம் செய்து விட்டு ஆட்டை கொல்வதால் பாவம் நீங்குமா? நீங்காது.
- ஆகையால் தீய செயல் செய்யாமல் பிற உயிர்களைக் கொல்லாமல் வாழுங்கள்.

வழங்குதல்

மனவரைபடக் கருத்துகளை குழுவினில் வழங்கி, ஒட்டு மொத்த தொகுத்தல் செய்தல்.

வலுவூட்டல்

விரைவுக் குறியீடு கொண்டு மடிக்கணினி மூலம் பாடல் காட்சிகளைக் காட்டி, பாடத்தை வலுவூட்டுதல்.

மதிப்பீடு

மாணாக்கர் திறன் அறிய சில வினாக்கள் கேட்டல்.

- **உயர் சிந்தனை வினா (HOT)**
  - ★ பறவைகளும் விலங்குகளும் சுதந்திரமாக வாழ நீங்கள் என்ன செய்ய வேண்டும்?
- **நடுத்தர சிந்தனை வினா (MOT)**
  - ★ ஒரு நாளும் விட்டுச் செல்லாதது எது?
- **எளிய சிந்தனை வினா (LOT)**
  - ★ அரசராலும் செய்ய முடியாத செயல் எது?

குறைதீர் கற்றல்

மெல்ல அரும்பும் மாணாக்கர்களுக்கு பாடலையும், பொருளினையும் கற்பித்துத் தனியே பயிற்சி அளித்தல்.

எழுதுதல்

- ➢ சொல்வதை எழுதுதல்.
- ➢ பாடநூல் மதிப்பீட்டு வினாக்கள் எழுதுதல்.

கற்றல் விளைவுகள்

ஆசியஜோதி வழி உயிரிரக்கம் பற்றி மாணவர்கள் அறிந்து கொண்டனர்.

தொடர்பணி

கவிமணி வாழ்க்கைக் குறிப்பை சுருக்கமாக எழுதிவரச் சொல்லல்.

வளரறி மதிப்பீடு (அ)

- ➢ பாடலைச் சந்த நயத்துடன் பாடுதல்.
- ➢ புத்தர் படம் வரைந்து வருதல்.

வளரறி மதிப்பீடு (ஆ) - வினாத்தாள்

காலம்: 15 நிமிடம் மதிப்பெண்: 10

அ. பொருள் கூறுக. (6)

1. கருணை -
2. மாரி -
3. கம்பி -
4. முற்றும் -
5. பூதலம் -
6. அஞ்சினர் -

ஆ. கோடிட்ட இடத்தை நிரப்புக. (4)

1. உயிர்களை அழிப்பது ------, உயிர் கொடுப்பது எவராலும் ------.
2. ------ உலகை ஆட்சி செய்யும்.
3. ------ நேர்மையான வாழ்வு.
4. காடு மலை மேய்ந்து வரும் ------.

★★★★★

இயல் 3

பாடத்திட்டக் கையேடு

உரைநடை உலகம்: மனிதநேயம்

- **பாடத்தின் தன்மை** : மனிதநேயம் பற்றிய பல்வேறு செய்திகளை விளக்குவதால், மைசிந்தும் வகையைச் சார்ந்தது.
- **கற்கும் முறை** : உரைப்பத்தியைக் குழுவாகப் படித்து அறிந்து, மாணவர்கள் குழுவாகக் கற்றல்.

துணைக் கருவிகள்

- மடிக்கணினி
- விளக்கப்படம்
- மின்னட்டைகள்

பாட அறிமுகம்

- மனித நேயம் கொண்டு வாழ்வோர் மட்டுமே சமுதாயத்தில் தலைசிறந்த சான்றோர் ஆவர்.
- அவர்களால் தான் உலகம் இன்றும் அழியாமல் இருக்கின்றது.

வாசித்தல்

உரைப் பகுதியினை ஆசிரியர் வாசித்துக் காட்ட மாணாக்கர்கள் தனித்தனியே வாசித்தல் மேற்கொள்ளுதல்.

கற்றல் திறன்கள்

- புதியச் சொற்களை அடிக்கோடிடல்.
- அகராதி கொண்டு பொருள் அறிந்து எழுதுதல்.
- மையக்கருத்தை அறிதல்.

மனவரைபடம்

மனிதநேயத்துடன் வாழ்பவர்களால் இவ்வுலகம் இயங்குதல். வள்ளலார் வடலூரில் சத்திய தருமச் சாலையைத் தொடங்கி உணவளித்தல்.

மனித நேயம்

அன்னை தெரசா - ஒருநாள் சாலை ஓரம் மூதாட்டி படுத்திருப்பதைப் பார்த்தார். காரணம் கேட்டார்.

மூதாட்டி - தொழு நோய் பாதிப்பு - தொட வேண்டாம் எனல்.

உறவினர் வெறுத்து ஒதுக்கி விட்டனர். கண்கலங்கி தொழு நோயாளிகளுக்குச் சேவை முடிவு.

தொகுத்தல்

- மனிதநேயத்துடன் வாழ்பவர்களால் தான் இவ்வுலகம் இயங்கிக் கொண்டிருக்கிறது.
- வள்ளலார் பசிப்பிணியைப் போக்க வடலூரில் சத்திய தருமச் சாலையைத் தொடங்கி எல்லாருக்கும் உணவளித்தார்.
- ஒரு நாள் அன்னை தெரசா சாலையின் ஓரமாக நடந்து சென்றார். அப்போது வழியில் ஒருவர் சாலையின் ஓரம் படுத்திருந்தார். அவர் முகத்தைத் துணியால் மூடிஇருந்தார். ஒரு கையால் பூனைக் குட்டியை அணைத்துக் கொண்டு இருந்தார்.
- அன்னை தெரசா அவரின் அருகில் சென்று உற்று நோக்கினார். தொழுநோயின் கடுமையால் உண்டான வேதனை மூதாட்டி முகத்தில் தெரிந்தது.
- கைகளில் விரல்கள் இல்லை. அன்னை தெரசா மனம் கலங்கினார். ‘என்னைத் தொடாதீர்கள், என் நோய் உங்களுக்கும் தொற்றிக் கொள்ளும். என் உறவினர்கள் என்னை வெறுத்து விலக்கி விட்டனர். என்னுடன் பேசுவதில்லை. என்னைக்

கண்டாலே விலகி ஓடுகின்றனர். இந்தப் பூனை மட்டுமே என்னுடன் இருக்கிறது' என அழுதாள் மூதாட்டி.

- இதைக் கேட்ட அன்னை தெரசா கண்ணீர் விட்டார்.

வழங்குதல்

மனவரைபடக் கருத்துகளை குழுவினில் வழங்கி, ஒட்டு மொத்த தொகுத்தல் செய்தல்.

வலுவூட்டல்

விரைவுக் குறியீடு கொண்டு மடிக்கணினி மூலம் பாடக்காட்சிகளைக் காட்டி, பாடத்தை வலுவூட்டுதல்.

மதிப்பீடு

மாணாக்கர் திறன் அறிய சில வினாக்கள் கேட்டல்.

- **உயர் சிந்தனை வினா (HOT)**
    - ★ மனித நேயம் என்று நீங்கள் எதையெல்லாம் கருதுகிறீர்கள்?
- **நடுத்தர சிந்தனை வினா (MOT)**
    - ★ கைலாஷ் சத்தியார்த்தி நோபல் பரிசு பெறக் காரணமாக இருந்த நிகழ்வு யாது?
- **எளிய சிந்தனை வினா (LOT)**
    - ★ யாரால் உலகம் இயங்கிக் கொண்டு இருக்கின்றது?

குறைதீர் கற்றல்

மெல்ல அரும்பும் மாணாக்கர்களுக்கு கூடுதல் வாசித்தல் பயிற்சியினையும், பாடப்பொருளினையும் கற்பித்துத் தனியே பயிற்சி அளித்தல்.

எழுதுதல்

- சொல்வதை எழுதுதல்.
- பாடநூல் மதிப்பீட்டு வினாக்கள் எழுதுதல்.

கற்றல் விளைவுகள்

மனிதநேய மாண்புகளை மாணவர்கள் அறிந்து கொண்டனர்.

தொடர்பணி

- மனிதநேயமிக்க சான்றோர் ஒருவர் என்னும் தலைப்பில் கட்டுரை எழுதிவரச் சொல்லல்.

வளரறி மதிப்பீடு (அ)

- பாடத்தின் மையக்கருத்தைக் கூறுதல்.
- மனிதநேயமிக்க சான்றோர் ஒருவர் குறித்துப் பேசுதல்.

வளரறி மதிப்பீடு (ஆ) - வினாத்தாள்

காலம்: 15 நிமிடம் மதிப்பெண்: 10

அ. கோடிட்ட இடத்தை நிரப்புக. (3)

1. ------, வாழ்பவர்களால் தான் இவ்வுலகம் இயங்கிக் கொண்டிருக்கிறது.
2. வள்ளலார் ------ போக்க வடலூரில் சத்திய தருமச் சாலையைத் தொடங்கி எல்லாருக்கும் உணவளித்தார்.
3. தொழுநோயாளிகளுக்கு உதவியவர் ------.

ஆ. சொற்றொடரில் அமைத்து எழுதுக. (4)

1. மனிதநேயம் -
2. உரிமை -
3. அமைதி -
4. அன்பு செய்தல் -

இ. பொருத்துக. (3)

1. வள்ளலார்	-	நோயாளிகளிடம் அன்பு காட்டியவர்
2. கைலாஷ் சத்யார்த்தி	-	பசிப்பிணி போக்கியவர்
3. அன்னை தெரசா	-	குழந்தைகள் உரிமைக்குப் பாடுபட்டவர்

★★★★★

இயல் 3

விரிவானம்: முடிவில் ஒரு தொடக்கம்

- **பாடத்தின் தன்மை** : உண்மையாக நடந்த மனித நேயமிக்க செயல்களின் செய்திகளை விளக்குவதால், மைசிந்தும் வகையைச் சார்ந்தது.
- **கற்கும் முறை** : குழுவாகப் படித்து அறிந்து, மாணவர்கள் குழுவாகக் கற்றல்.

துணைக் கருவிகள்

- விளக்கப்படம்
- மின்னட்டைகள்
- பொருத்தட்டை

பாட அறிமுகம்

- பணத்தை தானம் செய்வது மட்டும் தானம் ஆகாது.
- உடல் உறுப்புகளைத் தானம் செய்வது தான் உண்மையில் உயர் தானம் ஆகும்.

வாசித்தல்

உரைப்பத்தியை ஆசிரியர் வாசித்துக் காட்ட மாணாக்கர்கள் தனித் தனியே வாசித்தல் மேற்கொள்ளுதல்.

கற்றல் திறன்கள்

- புதியச் சொற்களை அடிக்கோடிடல்.
- அகராதி கொண்டு பொருள் அறிந்து எழுதுதல்.
- மையக்கருத்தை அறிதல்.

மனவரைபடம்

முடிவில் ஒரு தொடக்கம்

திருக்கழுக்குன்றம் – ஹிதேந்திரன் – விளையாடி விடு திரும்பல் – விபத்து– மூளைச் சாவு.

பெங்களூர் சிறுமி – இதய பாதிப்பு – மருத்துவமனை.

ஹிதேந்திரன் பெற்றோர் – மகன் இதயம் வாழ வைக்க – நினைத்தல்.

பெங்களூர் சிறுமி – ஹிதேந்திரன் இதயம் – பொருத்தல்.

தொகுத்தல்

- திருக்கழுக்குன்றம் ஊரில் ஒரு நாள் ஹிதேந்திரன் என்ற இளைஞர் விளையாடி விட்டு வீடு திரும்பும் போது விபத்து ஏற்பட்டு மூளைச் சாவு அடைகின்றார்.
- அதே நேரத்தில் பெங்களூர் சிறுமி ஒருவருக்கு இதய பாதிப்பு ஏற்பட்டு இறக்கும் தருவாயில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, அவளுக்கு இதயம் மாற்றினால் பிழைப்பாள் என்று மருத்துவர்கள் கூறினார்கள்.
- ஹிதேந்திரன் பெற்றோர் தன் மகன் இதயத்தை வாழ வைக்க நினைக்கின்றனர்.
- பெங்களூர் சிறுமிக்கு ஹிதேந்திரன் இதயம் பொருத்தப்பட்டு சிறுமியும், ஹிதேந்திரனும் பூமியில் வாழ்கின்றனர்.

வழங்குதல்

மனவரைபடக் கருத்துகளை குழுவினில் வழங்கி, ஒட்டு மொத்த தொகுத்தல் செய்தல்.

வலுவூட்டல்

விரைவுக் குறியீடு மூலம் மடிக்கணினியில் காட்சிகளைக் காட்டி, பாடத்தை வலுவூட்டுதல்.

மதிப்பீடு

மாணாக்கர் திறன் அறிய சில வினாக்கள் கேட்டல்.

- **உயர் சிந்தனை வினா (HOT)**
  - ★ முடிவில் தொடக்கம் மூலம் அறிந்த கருத்து யாது?
- **நடுத்தர சிந்தனை வினா (MOT)**
  - ★ பெங்களூர் சிறுமிக்கு ஏற்பட்டது என்ன?
- **எளிய சிந்தனை வினா (LOT)**
  - ★ ஹிதேந்திரனுக்கு என்ன ஆனது?

குறைதீர் கற்றல்

மெல்ல அரும்பும் மாணாக்கர்களுக்கு கூடுதல் வாசித்தல் பயிற்சியினையும், பாடப்பொருளினையும் கற்பித்துத் தனியே பயிற்சி அளித்தல்.

எழுதுதல்

- சொல்வதை எழுதுதல்.
- பாடநூல் மதிப்பீட்டு வினாக்கள் எழுதுதல்.

கற்றல் விளைவுகள்

உறுப்பு தானம் பற்றிய செய்திகளை மாணவர்கள் அறிந்து கொண்டனர்.

தொடர்பணி

முடிவில் ஒரு தொடக்கம் கதையினைச் சுருக்கி எழுதி வரச் சொல்லுதல்.

வளரறி மதிப்பீடு (அ)

உடல் உறுப்பு தானம் பற்றிக் கட்டுரை எழுதிவரச் சொல்லல்.

★★★★★

மனவரைபடம்

அணி இலக்கணம்

- பொருளின் இயல்பை உள்ளவாறு கூறுதல் **'இயல்பு நவிற்சி அணி'.**
- பொருளின் இயல்பை மிகுதிபடுத்திக் கூறுதல் **'உயர்வு நவிற்சி அணி'.**

தொகுத்தல்

இயல்பு நவிற்சி அணி	உயர்வு நவிற்சி அணி
பொருளின் இயல்பை உள்வாறு கூறுதல் இயல்பு நவிற்சி அணி ஆகும்.	பொருளின் இயல்பை மிகுதிபடுத்திக் கூறுதல் உயர்வு நவிற்சி அணி ஆகும்.
சான்று: 'தோட்டத்தில் மேயுது வெள்ளைப் பசு'	சான்று: 'ஓங்கி உயர்ந்த மரம்'.

வழங்குதல்

மனவரைபடக் கருத்துகளைக் குழுவினில் வழங்கி, ஒட்டு மொத்த தொகுத்தல் செய்தல்.

வலுவூட்டல்

மடிக்கணினி மூலம் அணி இலக்கணச் சிறப்புகளைப் பாடலாகக் காட்டி, பாடத்தை வலுவூட்டுதல்.

மதிப்பீடு

மாணாக்கர் திறன் அறிய சில வினாக்கள் கேட்டல்.

- **உயர் சிந்தனை வினா (HOT)**
  - ★ உயர்வு நவிற்சி அணியை விளக்குக.
- **நடுத்தர சிந்தனை வினா (MOT)**
  - ★ இயல்பு நவிற்சி அணியை விளக்குக.

கவிதைப்பேழை: விருந்தோம்பல்

- முன்றுறை அரையனார்

- **இயல்** : ஒன்று (நயத்தகு நாகரிகம்)
- **பாடத்தின் தன்மை** : விருந்தோம்பல் சிறப்பினை மட்டும் விளக்குவதால், தனித்த வகையைச் சார்ந்தது.
- **கற்கும் முறை** : ஆசிரியர் பாடலை சந்த நயத்தோடு, பாட அதனைக் கேட்டு மாணவர்கள் தானே கற்றல்.

துணைக் கருவிகள்

- பழமொழி நானூறு – நூல்
- விளக்கப்படம்
- ஒலிபெருக்கி
- மடிக்கணினி

பாட அறிமுகம்

- பழமொழி நானூறு பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று.
- இது நானூறு பாடல்களைக் கொண்டது.
- ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் ஒரு பழமொழி இடம் பெற்றிருப்பதால் இது ‘பழமொழி நானூறு’ என்னும் பெயர் பெற்றது.
- இந்நூலின் ஒரு பாடல் இங்குத் தரப்பட்டுள்ளது.

வாசித்தல்

நூல்வெளிப் பகுதியினை ஆசிரியர் வாசித்துக் காட்ட மாணாக்கர்கள் தனித்தனியே வாசித்தல் மேற்கொள்ளுதல்.

- **உயர் சிந்தனை வினா (HOT)**
  - ★ தமிழர்களின் பிற பண்பாட்டுக் கூறுகளை எழுதுக.
- **நடுத்தர சிந்தனை வினா (MOT)**
  - ★ 'ஒன்றாகு முன்றிலோ இல்' என்னும் பழமொழியின் பொருள் யாது?
- **எளிய சிந்தனை வினா (LOT)**
  - ★ பாரி மகளிரின் பெயர்களைக் கூறுக.

குறைதீர் கற்றல்

மெல்ல அரும்பும் மாணாக்கர்களுக்குப் பாடலையும், பொருளினையும் கற்பித்துத் தனியே பயிற்சி அளித்தல்.

எழுதுதல்

- சொல்வதை எழுதுதல்.
- பாடநூல் மதிப்பீட்டு வினாக்கள் எழுதுதல்.

கற்றல் விளைவுகள்

விருந்தோம்பல் சிறப்பு பற்றி மாணவர்கள் அறிந்து கொண்டனர்.

தொடர்பணி

கீழ்க்கணக்கு நூல்களைப் பட்டியலிட்டு, குறிப்பு எழுதி வரச் சொல்லுதல்.

வளரறி மதிப்பீடு (அ)

- பாடலைச் சந்த நயத்துடன் பாடுதல்.
- பாடல்சார் காட்சி படம் வரைந்து வருதல்.
- விருந்தோம்பல் குறித்த பழமொழி எழுதி வருதல்.

கவிதைப்பேழை: வயலும் வாழ்வும்

- கி.வா. ஜெகந்நாதன்

✦ **பாடத்தின் தன்மை** : உழவின் செயல்களை மட்டும் விளக்குவதால், தனித்த வகையைச் சார்ந்தது.

✦ **கற்கும் முறை** : ஆசிரியர் பாடலைச் சந்த நயத்துடன் பாட அதனைக் கேட்டு மாணவர்கள் தானே கற்றல்.

துணைக் கருவிகள்

- மலை அருவி – நூல்
- விளக்கப்படம்
- மடிக்கணினி

பாட அறிமுகம்

- நாட்டுப்புறங்களில் உழைக்கும் மக்கள் தங்கள் களைப்பு தெரியாமல் இருப்பதற்காகப் பாடும் பாடலே நாட்டுப்புறப்பாடல் எனப்படுகிறது.
- இதனை 'வாய்மொழி இலக்கியம்' என்றும் வழங்குவர்.
- பல்வேறு தொழில்கள் குறித்த நாட்டுப்புறப்பாடல்களை மலை அருவி என்னும் நூலில் கி.வா. ஜெகந்நாதன் தொகுத்துள்ளார்.

வாசித்தல்

நூல்வெளிப் பகுதியினை ஆசிரியர் வாசித்துக் காட்ட மாணாக்கர்கள் தனித்தனியே வாசித்தல் மேற்கொள்ளுதல்.

கற்றல் திறன்கள்

- புதியச் சொற்களை அடிக்கோடிடல்.
- அகராதி கொண்டு பொருள் அறிந்து எழுதுதல்.

மனவரைபடம்

ஒரு சாணுக்கு ஒரு நாற்று வீதம் நட்டல்.
வயலின் மண் குளிருமாறு மடை வழியே நீர்பாய்ச்சல்.
நட்ட நெற்பயிர்கள் வரிசையாக வளர்ந்து செழித்தல்.

உழவுத் தொழில்

பால் பிடித்து முற்றிய நெல்மணிகள் மனம் மயங்குமாறு விளைதல்.
அறுவடை செய்யும் ஆட்களுக்குப் பணம் கொடுத்தல்.

அறுவடை செய்த நெல்தாள்களைக் கட்டித் தலைக்குச் சும்மாடு வைத்துத் தூக்கிச் சென்று களத்தில் சேர்த்தல்.

கதிரடித்த நெல் தாள்களைக் கிழக்கத்தி மாடுகளைக் கொண்டு மிதிக்கச் செய்தல்.
மாடுகள் மிதித்த நெற்கதிர்களில் இருந்து நெல்மணிகள் மணிமணியாய் உதிர்தல்.

தொகுத்தல்

- ஒரு சாணுக்கு ஒரு நாற்று வீதம் சுறுசுறுப்பாக நட்டனர். நடவு நட்ட வயலின் மண் குளிருமாறு மடைவழியே நீர்பாய்ச்சினர். நட்ட நெற்பயிர்கள் வரிசையாக வளர்ந்து செழித்தன.
- பால் பிடித்து முற்றிய நெல்மணிகள் மனம் மயங்குமாறு விளைந்தன.
- அறுவடை செய்யும் ஆட்களுக்குப் பணம் கொடுத்தனர். அறுவடை செய்த நெல்தாள்களைக் கட்டுகளாகக் கட்டித் தலைக்குச் சும்மாடு வைத்துத் தூக்கிச் சென்று களத்தில் சேர்த்தனர்.
- கதிரடித்த நெல்தாள்களைக் கிழக்கத்தி மாடுகளைக் கொண்டு மிதிக்கச் செய்தனர். மாடுகள் மிதித்த நெற்கதிர்களில் இருந்து நெல்மணிகள் மணிமணியாய் உதிர்ந்தன.

மனவரைபடம்

திருநெல்வேலி

- முற்காலத்தில் திருநெல்வேலிக்கு 'வேணுவனம்' பெயர். மூங்கில் நெல் மிகுதியாக விளைந்ததால் 'நெல்வேலி' பெயர். நகரைச் சுற்றி நெல் வயல்கள் வேலி போல அமைந்திருந்ததால் திருநெல்வேலி எனப் பெயர்.
- திருநெல்வேலி பொருளாதாரத்தில் முதன்மையான பங்கு உழவுத்தொழில். தாமிரபரணி மூலம் இங்கு உழவுத்தொழில் நடைபெறல். குளத்துப் பாசனம், கிணற்றுப் பாசனம். இரு பருவங்களில் நெல் பயிரிடப்படுகின்றது. மானாவாரிப் பயிர்களாகச் சிறுதானியங்கள், எண்ணெய் வித்துகள், காய்கனிகள், பருத்தி, பயறு வகைகள் பயிரிடல்.
- அகத்தியர் பொதிகை மலை.
  சங்கப்புலவர்கள்: மாறோக்கத்து நப்பசலையார், நம்மாழ்வார், பெரியாழ்வார், குமரகுருபரர், திரிகூட ராசப்பக் கவிராயர், கவிராசப் பண்டிதர் ஆகியோர் மற்றும் ஜி.யு. போப், கால்டுவெல், வீரமாமுனிவர்.

தொகுத்தல்

- முற்காலத்தில் திருநெல்வேலிக்கு 'மூங்கில் காடு' என்னும் பொருள் கொண்ட 'வேணுவனம்' என்னும் பெயர் இருந்தது.
- மூங்கில் நெல் மிகுதியாக விளைந்ததால் அப்பகுதிக்கு 'நெல்வேலி' என்னும் பெயர் ஏற்பட்டிருக்கலாம்.
- நகரைச் சுற்றி நெல் வயல்கள் வேலி போல அமைந்திருந்ததால் 'திருநெல்வேலி' எனப் பெயர் பெற்றது.
- திருநெல்வேலி மாவட்டப் பொருளாதாரத்தில் முதன்மையான பங்கு வகிப்பது உழவுத்தொழில்.
- தாமிரபரணி ஆற்றின் மூலம் இங்கு உழவுத்தொழில் நடைபெறுகின்றது. இங்கு குளத்துப் பாசனமும் கிணற்றுப் பாசனமும் கூடப் பயன்பாட்டில் உள்ளன.

4. **இலக்கியங்களில் 'திரிகூடமலை' என்று குறிக்கப்படும் மலை ------.**

அ) பொதிகை மலை ஆ) குற்றால மலை

இ) பொருநை ஈ) பேட்டை

5. **திருநெல்வேலிப் பகுதியை வளம் செழிக்கச் செய்யும் ஆறு ------.**

அ) காவிரி ஆறு ஆ) தாமிரபரணி ஆறு

இ) நொய்யல் ஆறு ஈ) வைகை ஆறு

6. **'தண்பொருநை நதி' என்று முற்காலத்தில் அழைக்கப்பட்ட நதி ------.**

அ) காவிரி ஆறு ஆ) தாமிரபரணி ஆறு

இ) நொய்யல் ஆறு ஈ) வைகை ஆறு

ஆ. பொருத்துக. (4)

1.	தண்பொருநை	-	பொன் நாணயங்கள் உருவாக்கும் இடம்
2.	அக்கசாலை	-	குற்றாலம்
3.	கொற்கை	-	தாமிரபரணி
4.	திரிகூடமலை	-	முத்துக் குளித்தல்

★★★★★

விரிவானம்: திருநெல்வேலிச் சீமையும் கவிகளும்

- டி.கே.சிதம்பரநாதர்

✦ **பாடத்தின் தன்மை** : திருநெல்வேலி சீமைக் கவிதைச் செய்திகளை விளக்குவதால், மைசிந்தும் வகையைச் சார்ந்தது.

✦ **கற்கும் முறை** : திருநெல்வேலிச் சீமையும் கவிகளும் பகுதியைக் குழுவாகப் படித்து அறிந்து, மாணவர்கள் குழுவாகக் கற்றல்.

துணைக் கருவிகள்

- விளக்கப்படம்
- மின்னட்டைகள்
- மடிக்கணினி

பாட அறிமுகம்

- டி.கே. சிதம்பரநாதர் வழக்கறிஞர் தொழில் செய்தவர்.
- தமிழ் எழுத்தாளராகவும், திறனாய்வாளராகவும் புகழ் பெற்றவர், இரசிகமணி என்று சிறப்பிக்கப்பட்டவர்.
- இவர் தமது வீட்டில் 'வட்டத்தொட்டி' என்னும் பெயரில் இலக்கிய கூட்டங்கள் நடத்தி வந்தார்.

வாசித்தல்

திருநெல்வேலிச் சீமையும் கவிகளும் கதைச் சுருக்கத்தினை ஆசிரியர் வாசித்துக் காட்ட மாணாக்கர்கள் தனித்தனியே வாசித்தல் மேற்கொள்ளுதல்.

கற்றல் திறன்கள்

- புதிய சொற்களை அடிக்கோடிடல்.
- அகராதி கொண்டு பொருள் அறிந்து எழுதுதல்.
- மையக்கருத்தை அறிதல்.

மனவரைபடம்

திருநெல்வேலிக் கவிகள்

பாரதியார் - எட்டையபுரம் - புலவர்கள் - கவிராயர்கள். தேசிகவிநாயகனார் - கன்னியாகுமரி - நாஞ்சில் நாடு - தமிழ் கற்ற இடம் - திருநெல்வேலி.

பிள்ளைப்பெருமாள் - சீவைகுண்டத்துப் பெருமாள் - கொற்கை - புகழ் பெரியது - இரண்டாயிரம் வருடம் - பெருங்கவிஞர் - முத்தொள்ளாயிர ஆசிரியர்.

இருநூற்றைம்பது வருடங்கள் - குற்றாலம் - மேலகரம் - திரிகூடராசப்பக் கவிராயர் - பாடிய நூல்.

தமிழ் இலக்கியம் - குற்றாலக் குறவஞ்சி - உண்மையான - தமிழ்ப் பண்பு - கவிப்பண்பு

தொகுத்தல்

- பாரதியார் பிறந்து வளர்ந்த இடம் எட்டையபுரம். எட்டையபுர சமஸ்தானம் நெடுகிலும் ஊர் ஊராய்ப் புலவர்களும் கவிராயர்களும் வாழ்ந்தனர்.
- தேசிகவிநாயகனார் கன்னியாகுமரிப் பக்கம் - அதாவது நாஞ்சில் நாட்டில் பிறந்து வளர்ந்தவராய் இருந்தாலும் அவர் தமிழை அழுத்தமாக ஆர்வத்தோடு கற்ற இடம் திருநெல்வேலி நகர்தான்.
- பிள்ளைப்பெருமாள் திருவைகுண்டத்துப் பெருமாளைப் பற்றிப் பாடியுள்ளார். கொற்கை என்கிற சிறு ஊர்தான் அது. அதன் புகழோ அபாரம்.
- சுமார் இரண்டாயிரம் வருடத்துக்கு முன்னிருந்த ஒரு பெருங்கவிஞர் முத்தொள்ளாயிர ஆசிரியர்.
- பிற்காலத்திலே எழுந்த தமிழ் இலக்கியங்களில் முக்கியமானது குற்றாலக் குறவஞ்சி.
- அஃது உண்மையான தமிழ்ப் பண்பும் கவிப்பண்பும் வாய்ந்தது.
- இருநூற்றைம்பது வருடங்களுக்கு முன் குற்றாலத்துக்குக் கிழக்கே இரண்டு மைலில் உள்ள மேலகரத்தில் வாழ்ந்து வந்த திரிகூடராசப்பக் கவிராயர் பாடிய நூல்.

வலுவூட்டல்

விரைவுக் குறியீடு மூலம் பாடப்பகுதியைக் காட்டி, பாடத்தை வலுவூட்டுதல்.

மதிப்பீடு

மாணாக்கர் திறன் அறிய சில வினாக்கள் கேட்டல்.

- **உயர் சிந்தனை வினா (HOT)**
    - ★ இல்பொருள் உவமை அணி என்றால் என்ன?
- **நடுத்தர சிந்தனை வினா (MOT)**
    - ★ உவமையணி என்றால் என்ன?
- **எளிய சிந்தனை வினா (LOT)**
    - ★ அணி என்றால் என்ன?

குறைதீர் கற்றல்

மெல்ல அரும்பும் மாணாக்கர்களுக்கு உவமை அணிகளின் வகைகளைச் சான்றுடன் மீண்டும் கற்பித்துத் தனியே பயிற்சி அளித்தல்.

எழுதுதல்

- சொல்வதை எழுதுதல்.
- பாடநூல் மதிப்பீட்டு வினாக்கள் எழுதுதல்.

கற்றல் விளைவுகள்

அணி இலக்கணம் பற்றி மாணவர்கள் அறிந்து கொண்டனர்.

தொடர்பணி

உவமை, எடுத்துக்காட்டு உவமை, இல்பொருள் உவமைக்குப் பிற சான்றுகள் எழுதி வரச் சொல்லுதல்.

வளரறி மதிப்பீடு (அ)

★ சான்றுகளை வகைப்படுத்தல்.

★ உவமையணிக்குப் பிற சான்று கூறல்.

வளரறி மதிப்பீடு (ஆ) - வினாத்தாள்

காலம் : 10 நிமிடம் மதிப்பெண்: 10

பின்வரும் தொடர்களில் உள்ள உவமை, உவமேயம், உவம உருபு ஆகியவற்றைக் கண்டறிந்து எழுதுக.

தொடர்கள்	உவமை	உவமேயம்	உவம உருபு
மலரன்ன பாதம்	மலர்	பாதம்	
தேன் போன்ற தமிழ்			
புலி போலப் பாய்ந்தான் சோழன்			
மயிலொப்ப ஆடினாள் மாதவி			

★★★★★

இயல் 2

பாடத்திட்டக் கையேடு

கவிதைப்பேழை: புதுமை விளக்கு

- பொய்கை ஆழ்வார், பூதத்தாழ்வார்.

- **இயல்** : இரண்டு (ஒப்புரவு ஒழுகு)
- **பாடத்தின் தன்மை** : அன்பையும் உள்ளத் தூய்மையையும் மட்டும் விளக்குவதால், தனித்த வகையைச் சார்ந்தது.
- **கற்கும் முறை** : ஆசிரியர் பாடலைச் சந்த நயத்தோடு பாட அதனைக் கேட்டு மாணவர்கள் தானே கற்றல்.

துணைக் கருவிகள்

- நாலாயிரத் திவ்ய பிரபந்தம் – நூல்
- விளக்கப்படம்
- ஒலிபெருக்கி
- மடிக்கணினி

பாட அறிமுகம்

- திருமாலைப் போற்றிப் பாடியவர்கள் பன்னிரு ஆழ்வார்கள்.
- அவர்கள் பாடிய பாடல்கள் தொகுப்பே ‘நாலாயிரத் திவ்யப் பிரபந்தம்’ ஆகும்.
- இதனைத் தொகுத்தவர்: நாதமுனி.

வாசித்தல்

நூல் வெளிப் பகுதியினை ஆசிரியர் வாசித்துக் காட்ட மாணாக்கர்கள் தனித்தனியே வாசித்தல் மேற்கொள்ளுதல்.

மதிப்பீடு

மாணாக்கர் திறன் அறிய சில வினாக்கள் கேட்டல்.

- **உயர் சிந்தனை வினா (HOT)**
  - ★ பொய்கையாழ்வார் ஞானத்தை விளக்காக உருவகப் படுத்துகிறார். நீங்கள் எவற்றை எல்லாம் விளக்காக உருவகப்படுத்துவீர்கள்?
- **நடுத்தர சிந்தனை வினா (MOT)**
  - ★ பூதத்தாழ்வார் ஞானவிளக்கு ஏற்றும் முறையை விளக்குக.
- **எளிய சிந்தனை வினா (LOT)**
  - ★ பொய்கையாழ்வாரும் பூதத்தாழ்வாரும் அகல்விளக்காக எவற்றை உருவகப்படுத்துகின்றனர்?

குறைதீர் கற்றல்

மெல்ல அரும்பும் மாணாக்கர்களுக்கு வினா விடைகளை எளிமைப் படுத்தி, கற்பித்துத் தனியே பயிற்சி அளித்தல்.

எழுதுதல்

- சொல்வதை எழுதுதல்.
- பாடநூல் மதிப்பீட்டு வினாக்கள் எழுதுதல்.

கற்றல் விளைவுகள்

புதுமை விளக்குச் சிறப்பு பற்றி மாணவர்கள் அறிந்து கொண்டனர்.

தொடர்பணி

ஆழ்வார்களின் பெயர்களைப் பட்டியலிட்டு, குறிப்பு எழுதி வரச் சொல்லுதல்.

வளரறி மதிப்பீடு (அ)

- பாடலைச் சந்த நயத்துடன் பாடுதல்.
- பாடல்சார் காட்சி படம் வரைந்து வருதல்.

வளரறி மதிப்பீடு (ஆ) - வினாத்தாள்

காலம்: 15 நிமிடம் மதிப்பெண்: 10

அ. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (3)

1. **இடர் ஆழி நீங்குகவே - இத்தொடரில் அடிக்கோடிட்ட சொல்லின் பொருள் ------.**

அ) துன்பம் ஆ) மகிழ்ச்சி
இ) ஆர்வம் ஈ) இன்பம்

2. **'ஞானச்சுடர்' என்னும் சொல்லைப் பிரித்தெழுதக் கிடைப்பது ------.**

அ) ஞான + சுடர் ஆ) ஞானச் + சுடர்
இ) ஞானம் + சுடர் ஈ) ஞானி + சுடர்

3. **'இன்பு + உருகு' என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைப்பது ------.**

அ) இன்பு உருகு ஆ) இன்பும் உருகு
இ) இன்புருகு ஈ) இன்பருகு

ஆ. பொருத்துக. (4)

1. அன்பு - நெய்
2. ஆர்வம் - தகளி
3. சிந்தை - விளக்கு
4. ஞானம் - இடுதிரி

இ. பொருள் கூறுக. (2)

1. வையகம் -
2. தகளி -

*****

- **உயர் சிந்தனை வினா (HOT)**
  - ★ இளம் வயதிலேயே நாம் கற்றுக்கொள்ள வேண்டிய நற்பண்புகள் எவை எனக் கருதுகிறீர்கள்?
- **நடுத்தர சிந்தனை வினா (MOT)**
  - ★ இளம்வயதிலேயே செய்ய வேண்டிய செயல்களாக முனைப்பாடியார் கூறுவன யாவை?
- **எளிய சிந்தனை வினா (LOT)**
  - ★ அறக்கதிர் விளைய எதனை எருவாக இடவேண்டும் என முனைப்பாடியார் கூறுகிறார்?

குறைதீர் கற்றல்

மெல்ல அரும்பும் மாணாக்கர்களுக்குப் பாடலையும் பொருளினையும் கற்பித்துத் தனியே பயிற்சி அளித்தல்.

எழுதுதல்

பாடநூல் மதிப்பீட்டு வினாக்கள் எழுதுதல்.

கற்றல் விளைவுகள்

இளம் வயதில் செய்ய வேண்டியன பற்றி மாணவர்கள் அறிந்து கொண்டனர்.

தொடர்பணி

அறம் கூறும் நூல்களை நூலகம் பயன்படுத்தி எழுதி வரச் சொல்லுதல்.

வளரறி மதிப்பீடு (அ)

- பாடலைச் சந்த நயத்துடன் பாடுதல்.
- அறம் பற்றிய பிற பாடல் எழுதி வருதல்.
- கல்வியின் சிறப்பை விளக்கும் பிற பாடல் எழுதுதல்.

இயல் 2

உரைநடை உலகம்: ஒப்புரவு நெறி

- **பாடத்தின் தன்மை** : ஒப்புரவு நெறி பற்றிய பற்றிய பல்வேறு செய்திகளை விளக்குவதால், மைசிந்தும் வகையைச் சார்ந்தது.
- **கற்கும் முறை** : உரைப்பத்தியைக் குழுவாகப் படித்து அறிந்து, மாணவர்கள் குழுவாகக் கற்றல்.

துணைக் கருவிகள்

- விளக்கப்படம்
- மின்னட்டைகள்
- மடிக்கணினி

பாட அறிமுகம்

பொருளீட்டுவதை விடப் பெரிய காரியம் அதை முறையாக அனுபவிப்பதும் கொடுத்து மகிழ்வதும் ஆகும்.

வாசித்தல்

உரைப் பகுதியினை ஆசிரியர் வாசித்துக் காட்ட மாணாக்கர்கள் தனித்தனியே வாசித்தல் மேற்கொள்ளுதல்.

கற்றல் திறன்கள்

- புதிய சொற்களை அடிக்கோடிடல்.
- அகராதி கொண்டு பொருள் அறிந்து எழுதுதல்.
- மையக்கருத்தை அறிதல்.

- பயன்மரம் பழங்களைத் தருவது உரிமை எல்லைகளைக் கவனத்தில் கொண்டல்.
- மருந்துமரம் உதவி செய்தலில் தன்னை மறந்த நிலையிலான பயன்பாட்டு நிலை ஒன்றே காணப்பெறுகிறது.
- நோயுடையார் எல்லாரும் பயன்படுத்தலாம். ஒப்புரவை விளக்கப் பயன்படுத்தியுள்ள இந்த உவமைகள் இன்றும் பயன்படுத்தலாம்.

வழங்குதல்

மனவரைபடக் கருத்துகளைக் குழுவினில் வழங்கி, ஒட்டு மொத்த தொகுத்தல் செய்தல்.

வலுவூட்டல்

மடிக்கணினியில் விரைவுக் குறியீடு மூலம் கல்வியின் சிறப்புகளைக் காட்டி, பாடத்தை வலுவூட்டுதல்.

மதிப்பீடு

மாணாக்கர் திறன் அறிய சில வினாக்கள் கேட்டல்.

- **உயர் சிந்தனை வினா (HOT)**
  - ★ ஒப்புரவுக்கும் உதவி செய்தலுக்கும் – வேறுபாடு.
  - ★ ஊருணி, பயன்மரம் பற்றி வள்ளுவர் குறிப்பிடும் குறட்பாக்கள் எவை?
- **நடுத்தர சிந்தனை வினா (MOT)**
  - ★ ஒப்புரவுக்கு அடிகளார் தரும் விளக்கம் யாது?
  - ★ ஊருணியையும் மரத்தையும் எடுத்துக்காட்டி குன்றக்குடி அடிகளார் கூறும் செய்திகள் யாவை?
- **எளிய சிந்தனை வினா (LOT)**
  - ★ பொருளீட்டுவதை விடவும் பெரிய செயல் எது?
  - ★ பொருளீட்டுவதன் நோக்கமாகக் குன்றக்குடி அடிகளார் கூறுவது யாது?

குறைதீர் கற்றல்

மெல்ல அரும்பும் மாணாக்கர்களுக்கு வினா விடைகளை எளிமைப்படுத்தி, கற்பித்துத் தனியே பயிற்சி அளித்தல்.

எழுதுதல்

- சொல்வதை எழுதுதல்.
- பாடநூல் மதிப்பீட்டு வினாக்கள் எழுதுதல்.

கற்றல் விளைவுகள்

ஒப்புரவு நெறி குறித்து மாணவர்கள் அறிந்து கொண்டனர்.

தொடர்பணி

ஒப்புரவு நெறியில் புகழ்பெற்ற சான்றோர்கள் பற்றி எழுதி வரச் சொல்லுதல்.

வளரறி மதிப்பீடு (அ)

- பாடத்தின் மையக்கருத்தைக் கூறுதல்.
- அறத்திற்கு பெருமை சேர்த்த சான்றோர் குறித்து எழுதி வருதல்.
- கொடைச் சிறப்பு என்னும் தலைப்பில் பேசுதல்.

வளரறி மதிப்பீடு (ஆ) - வினாத்தாள்

காலம்: 15 நிமிடம் மதிப்பெண்:10

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (10)

1. ஒப்புரவு நெறியை அறிமுகம் செய்வது ------.

அ) திருக்குறள் ஆ) நாலடியார்
இ) புறநானூறு ஈ) பழமொழி

2. செல்வத்தப் பயனே ஈதல் - என்று கூறும் நூல் ------

அ) திருக்குறள் ஆ) புறநானூறு
இ) அகநானூறு ஈ) பதிற்றுப்பத்து

3. தேவைப்படுவோர் அனைவரும் தண்ணீர் எடுத்துக் குடிப்பதற்கு உரிமை உடையது ------.

மனவரைபடம்

ஒரு மனிதரைக் காணும் போது என் உடன் பிறந்தவர் என்று எப்போது உணர்கிறீர்களோ, அப்போது தான் உண்மையான ஒளி.

உண்மை ஒளி

குரு சந்தையில் குதிரை வாங்கச் செல்லல் – திருடன் குதிரை வியாபாரம் – திருடனுக்கு அறிவுரை.

குரு – சாலையோரம் மயங்கிக் கிடந்தவன். குரு தண்ணீர் கொடுத்து மயக்கம் தெளிவித்தல்.

குரு குதிரையில் அமரச் செய்து கூட்டிச்செல்லல். அவன் குதிரையைத் திருடி ஓட்டிச் செல்லல்.

தொகுத்தல்

- ஒரு மனிதரைக் காணும் போது என் உடன் பிறந்தவர் என்று எப்போது உணர்கிறீர்களோ, அப்போது தான் உண்மையான ஒளி உங்களுக்குள் ஏற்படுகிறது என்பது பொருள் என்றார் குரு.
- ஒரு நாள் குரு குதிரையில் அருகில் உள்ள சிற்றூருக்குப் புறப்பட்டுச் செல்கின்றார். சாலையோரத்தில. ஒருவன் மயங்கிக் கிடந்தான். குரு அவனிடம் தண்ணீர் கொடுத்து' **நீ யார்?'** என்று கேட்க, அவன் 'பக்கத்து ஊர் செல்ல வேண்டும். பசியால் மயங்கி விழுந்துவிட்டேன்' என்றான்.
- குரு இரக்கம் கொண்டு அவனை குதிரை மீது அமரச்செய்தார்.
- குதிரையை அடித்து அவன் வேகமாகச் சென்று விட்டான்.
- அவன் திருடன் என்பதையும், தான் ஏமாற்றப்பட்டதையும் அறிந்தார்.
- குதிரை வாங்க குரு குதிரைச் சந்தைக்குச் சென்றார். அங்கு அந்த திருடன் குதிரையை விற்றுக் கொண்டிருந்தார். குரு யாரிடமும் எதையும் சொல்லாதே! என்றார்.

- அதற்கு திருடன், இவர் ஏமாந்தது யாருக்காவது தெரிந்தால் அவமானம் என்று நினைக்கின்றாரோ? என்று மனதில் நினைத்தான்.
- அதற்கு குரு, நான் ஏமாந்து போனது தெரிந்தால் உண்மையில் சாலையில் மயக்கம் அடைந்து யார் கிடந்தாலும் அவருக்கு யாரும் உதவ மாட்டர்கள் என்றார்.
- குருவின் பெருமையை நினைத்து தலைகுனிந்தான் திருடன்.

வழங்குதல்

மடிக்கணினியில் விரைவுக் குறியீடு மூலம் படக்கதைக் காட்சிகளைக் காட்டி, பாடத்தை வலுவூட்டுதல்.

வலுவூட்டல்

மடிக்கணினி மூலம் பாடல் காட்சிகளைக் காட்டி, பாடத்தை வலுவூட்டுதல் செய்தல்.

மதிப்பீடு

மாணாக்கர் திறன் அறிய சில வினாக்கள் கேட்டல்.

- **உயர் சிந்தனை வினா (HOT)**
  - ★ உண்மை ஒளி படக்கதையைச் சுருக்கிக் கூறுக.
- **நடுத்தர சிந்தனை வினா (MOT)**
  - ★ சீடர்களுக்குக் குரு கூறிய அறிவுரைகள் யாவை?
- **எளிய சிந்தனை வினா (LOT)**
  - ★ குரு யாருக்காக இரக்கப்பட்டார்?

குறைதீர் கற்றல்

மெல்ல அரும்பும் மாணாக்கர்களுக்கு கூடுதல் வாசித்தல் பயிற்சியினையும், கதையின் சுருக்கத்தையும் கற்பித்துத் தனியே பயிற்சி அளித்தல்.

எழுதுதல்

- சொல்வதை எழுதுதல்.
- பாடநூல் மதிப்பீட்டு வினாக்கள் எழுதுதல்.

கற்றல் விளைவுகள்

ஜென் கதையை மாணவர்கள் அறிந்து கொண்டனர்.

தொடர்பணி

நூலகத்திற்குச் சென்று ஜென் கதைகள் பிறவற்றை எழுதி வரச் சொல்லுதல்.

வளரறி மதிப்பீடு (அ)

படக்கதைச் செய்திகளைச் சுருக்கி எழுதி வருதல்.

★★★★★

கற்கண்டு: அணி இலக்கணம்

- **பாடத்தின் தன்மை** : அணி இலக்கணம் பற்றிய பல்வேறு செய்திகளை விளக்குவதால், மரக்கிளை வகையைச் சார்ந்தது.
- **கற்கும் முறை** : அணி இலக்கணம் கருத்துகளைக் குழுவாகப் படித்து அறிந்து, மாணவர்கள் குழுவாகக் கற்றல்.

துணைக் கருவிகள்

- வரைபடம்
- மின்னட்டைகள்
- பொருத்தட்டை
- தண்டியலங்காரம்

பாட அறிமுகம்

- அணி என்றால் அழகு என்பது பொருள்.
- செய்யுளை அழகுபடுத்துவது அணி ஆகும்.

வாசித்தல்

ஆசிரியர் வாசித்துக் காட்ட மாணாக்கர்கள் தனித்தனியே வாசித்தல் மேற்கொள்ளுதல்.

கற்றல் திறன்கள்

சான்றுகள் அறிதல் மற்றும் வகைப்படுத்தல்.

மனவரைபடம்

அணி இலக்கணம்

உவமை வேறு, உவமிக்கப்படும் பொருள் வேறு என்றில்லாமல் இரண்டும் ஒன்றே என்பது தோன்றும்படி கூறுவது உருவக அணியாகும்.
சான்று: ‘வையகம் தகழியாக வார்கடல் நெய்யாக’.

ஒன்றை உருவகப்படுத்தி மற்றொன்றை உருவகப் படுத்தாமல் வருவது, ஏகதேச உருவக அணி.
சான்று: பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்.

தொகுத்தல்

உருவக அணி	ஏகதேச உருவக அணி
உவமை வேறு, உவமிக்கப்படும் பொருள் வேறு என்றில்லாமல் இரண்டும் ஒன்றே என்பது தோன்றும்படி கூறுவது உருவக அணியாகும்.	இருபொருள்களுள் ஒன்றை உருவகப்படுத்தி மற்றொன்றை உருவகப்படுத்தாமல் விடுவது, ஏகதேச உருவக அணி ஆகும்.
சான்று: “வையகம் தகழியாக வார்கடல் நெய்யாக”	**சான்று :** பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம் கருமமே கட்டளைக் கல்.

வழங்குதல்

மனவரைபடக் கருத்துகளைக் குழுவினில் வழங்கி, ஒட்டு மொத்த தொகுத்தல் செய்தல்.

வலுவூட்டல்

விரைவுக் குறியீடு மூலம் பாடப்பகுதியைக் காட்டி, பாடத்தை வலுவூட்டுதல்.

வளரறி மதிப்பீடு (ஆ) - வினாத்தாள்

காலம்: 15 நிமிடம் மதிப்பெண்:10

உவமைத்தொடர்களை எழுதி அவற்றை உருவகங்களாக மாற்றுக.

உவமை	உருவகம்	உவமை	உருவகம்
மலர் போன்ற முகம்	முகமலர்		விழிக்கயல்
முத்துப் போன்ற பல்	பல்முத்து		
பூ போன்ற விரல்			தமிழ்த்தேன்
மதி போன்ற முகம்			
குயில் போன்ற குரல்	குரல் குயில்		

★★★★★

வாழ்வியல்
திருக்குறள்

- திருவள்ளுவர்

- **பாடத்தின் தன்மை** : அறச் செயல்களை மட்டும் விளக்குவதால், தனித்தவகையைச் சார்ந்தது.
- **கற்கும் முறை** : ஆசிரியர் பாடலைச் சந்தநயத்துடன் பாட அதனைக் கேட்டு மாணவர்கள் தானே கற்றல்.

துணைக் கருவிகள்

- திருக்குறள் – நூல்
- விளக்கப்படம்
- மடிக்கணினி

பாட அறிமுகம்

- உலகப் பொதுமறை திருக்குறள் ஆகும்.
- 133 அதிகாரம், 1330 குறட்பா ஆகியவற்றைக் கொண்டுள்ளது.

வாசித்தல்

குறட்பாக்களை ஆசிரியர் வாசித்துக் காட்ட மாணாக்கர்கள் தனித் தனியே வாசித்தல் மேற்கொள்ளுதல்.

கற்றல் திறன்கள்

- புதியச் சொற்களை அடிக்கோடிடல்.
- அகராதி கொண்டு பொருள் அறிந்து எழுதுதல்.

மனவரைபடம்

குறட்பா விளக்கம்

பொருள், கருவி, காலம், செயலின் தன்மை, உரிய இடம் ஆகிய ஐந்தும் அறிந்து செய்ய வேண்டும். யானை கொண்டு மற்றொரு யானையைப் பிடிப்பர். ஒரு செயலைச் செய்யும் போது அச்செயலால் மற்றொரு செயலைச் செய்து முடி.

கற்றவர் முன் தெளிவாகச் சொல்பவரே கற்றவருள் மிகவும் கற்றவராக மதிக்கப்படுபவர். தெளிந்த நீர், நிலம், மலை, நிழல் உடைய காடு - நாட்டிற்கு அரண்கள்.

மிக்க பசி, ஓயாத நோயும், அழிவு செய்யும் பகை சேராமல் நாடு - பெரிய அளவில் முயற்சி இல்லாமல் வளம் தரும் நாடே சிறந்த நாடு. பிறப்பால் மக்கள் அனைவரும் சமம். ஆனால் அவரவர் செய்யும் நன்மை, தீமையாகியச் செயல்களால் இவர்களது சிறப்பியல்புகள் ஒத்திருப்பதில்லை.

தொகுத்தல்

- பொருள், கருவி, காலம், செயலின் தன்மை, உரிய இடம் ஆகிய ஐந்தும் ஆராய்ந்து அறிந்து ஒரு செயலைச் செய்ய வேண்டும்.
- யானை கொண்டு மற்றொரு யானையைப் பிடிப்பர். அதுபோல ஒரு செயலைச் செய்யும் போது அச்செயலால் மற்றொரு செயலைச் செய்து முடிக்க வேண்டும்.
- தாம் கற்றவற்றைக் கற்றவர் முன் தெளிவாகச் சொல்பவரே கற்றவருள் மிகவும் கற்றவராக மதிக்கப்படுபவர் ஆவர்.
- தெளிந்த நீர், நிலம், மலை, நிழல் உடைய காடு ஆகிய நான்கும் ஒரு நாட்டிற்கு அரண்கள் ஆகும்.
- மிக்க பசி, ஓயாத நோயும், அழிவு செய்யும் பகை சேராமல் நல்லவகையில் நடைபெறுவதே நாடு ஆகும்.
- பெரிய அளவில் முயற்சி இல்லாமல் வளம் தரும் நாடே சிறந்த நாடு.

வளரறி மதிப்பீடு (அ)

பாடலைச் சந்த நயத்துடன் பாடுதல்.

வளரறி மதிப்பீடு (ஆ) - வினாத்தாள்

மதிப்பெண்: 10 காலம்: 10 நிமிடம்

அ. பொருள் கூறுக. **(4)**

1. வினை -
2. பிணி -
3. ஓவா -
4. மாட்சி -

ஆ. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. **(6)**

1. ------ ஒரு நாட்டின் அரணன்று.

அ) காடு ஆ) வயல்
இ) மலை ஈ) தெளிந்த நீர்

2. மக்கள் அனைவரும் ------ ஒத்த இயல்புடையவர்கள்.

அ) பிறப்பால் ஆ) நிறத்தால்
இ) குணத்தால் ஈ) பணத்தால்

3. 'நாடென்ப' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ------.

அ) நான் + என்ப ஆ) நா + டென்பது
இ) நாடு + என்ப ஈ) நாடு + டேன்ப

4. 'கண் + இல்லது' என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ------.

அ) கணிஇல்லது ஆ) கணில்லது
இ) கண்ணில்லாது ஈ) கண்ணில்லது

5. ஒரு செயலைச் செய்யும் போது மற்றொரு செயலைச் செய்வதற்கு வள்ளுவர் கூறிய உவமை

அ) யானை ஆ) புலி
இ) மான் ஈ) கொக்கு

6. பிணி என்னும் சொல்லின் பொருள் ------.

அ) உலகம் ஆ) நோய்
இ) செயல் ஈ) காலம்

★★★★★

இயல் 3

கவிதைப்பேழை: மழைப்பொழிவு

- கண்ணதாசன்

- **இயல்** : மூன்று (மானுடம் வெல்லும்)
- **பாடத்தின் தன்மை** : அன்பின் சிறப்பினை மட்டும் விளக்குவதால், தனித்த வகையைச் சார்ந்தது.
- **கற்கும் முறை** : ஆசிரியர் பாடலை சந்த நயத்தோடு பாட அதனைக் கேட்டு மாணவர்கள் தானே கற்றல்.

துணைக் கருவிகள்

- இயேசு காவியம் – நூல்
- விளக்கப்படம்
- ஒலிபெருக்கி
- மடிக்கணினி

பாட அறிமுகம்

- எல்லோரிடமும் அன்பு காட்டி அமைதியையே வாழ்வியல் நெறியாகக் கொண்டு வாழ்ந்தால் உலகம் உயர்வடையும்.
- இவ்வுண்மையை இயேசு காவியம் வழி அறிவோம்.

வாசித்தல்

நூல்வெளிப் பகுதியினை ஆசிரியர் வாசித்துக் காட்ட மாணாக்கர்கள் தனித் தனியே வாசித்தல் மேற்கொள்ளுதல்.

கற்றல் திறன்கள்

- புதியச் சொற்களை அடிக்கோடிடல்.
- அகராதி கொண்டு பொருள் அறிந்து எழுதுதல்.

- அறத்தை நம்பினால் சண்டை இல்லாமல் உலகம் அமைதியாகி விடும். பொருள் ஈட்டுவதிலும் அறவழியைப் பின்பற்ற வேண்டும்.
- மனிதன் ஆசையில் விழுந்துவிட்டால் அவனது வாழ்வு பாலைவனம் போல் பயனற்றதாகிவிடும்.

வழங்குதல்

மனவரைபடக் கருத்துகளைக் குழுவினில் வழங்கி, ஒட்டு மொத்த தொகுத்தல் செய்தல்.

வலுவூட்டல்

மடிக்கணினி மூலம் பாடல் காட்சிகளைக் காட்டி, பாடத்தை வலுவூட்டுதல் செய்தல்.

மதிப்பீடு

மாணாக்கர் திறன் அறிய சில வினாக்கள் கேட்டல்.

- **உயர் சிந்தனை வினா (HOT)**
  - ★ எல்லா மக்களும் ஒற்றுமையாக வாழ என்ன செய்ய வேண்டும்?
- **நடுத்தர சிந்தனை வினா (MOT)**
  - ★ சாந்தம் பற்றி இயேசு காவியம் கூறுவன யாவை?
- **எளிய சிந்தனை வினா (LOT)**
  - ★ வாழ்க்கை மலர்ச்சோலையாக மாற என்ன செய்ய வேண்டும்?

குறைதீர் கற்றல்

மெல்ல அரும்பும் மாணாக்கர்களுக்குப் பாடலையும், பொருளினையும் கற்பித்துத் தனியே பயிற்சி அளித்தல்.

எழுதுதல்

- சொல்வதை எழுதுதல்.
- பாடநூல் மதிப்பீட்டு வினாக்கள் எழுதுதல்.

கற்றல் விளைவுகள்

அன்பு வழியே சிறப்பு என்பதை மாணவர்கள் அறிந்து கொண்டனர்.

தொடர்பணி

கண்ணதாசன் இயற்றிய நூல்களைப் பட்டியலிட்டு, குறிப்பு எழுதி வரச் சொல்லுதல்.

வளரறி மதிப்பீடு (அ)

- பாடலைச் சந்த நயத்துடன் பாடுதல்.
- பாடல்சார் காட்சி படம் வரைந்து வருதல்.

வளரறி மதிப்பீடு (ஆ) - வினாத்தாள்

காலம்: 10 நிமிடம் மதிப்பெண்: 10

அ. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (6)

1. மனித வாழ்க்கையில் தேவைப்படுவது ------.
அ) பணம் ஆ) பொறுமை இ) புகழ் ஈ) வீடு

2. சாந்த குணம் உடையவர்கள் ------ முழுவதையும் பெறுவர்.
அ) புத்தகம் ஆ) செல்வம் இ) உலகம் ஈ) துன்பம்

3. **'மலையளவு' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ------.**
அ) மலை + யளவு ஆ) மலை + அளவு
இ) மலையின் + அளவு ஈ) மலையில் + அளவு

4. 'தன்னாடு' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ------.
அ) தன் + னாடு ஆ) தன்மை + நாடு
இ) தன் + நாடு ஈ) தன்மை + நாடு

5. இவை + இல்லாது என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைப்பது ------.
அ) இவையில்லாது ஆ) இவைஇல்லாது
இ) இவயில்லாது ஈ) இவஇல்லாது

6. முத்தையா என்னும் இயற்பெயர் கொண்ட கவிஞர் ------.
அ) பாரதியார் ஆ) பாரதிதாசன்
இ) சுரதா ஈ) கண்ணதாசன்

ஆ. பொருத்துக. (4)

1. சாந்தம் - சிறப்பு
2. மகத்துவம் - உலகம்
3. தாரணி - கருணை
4. இரக்கம் - அமைதி

★★★★★

கவிதைப்பேழை: தன்னை அறிதல்

- சே.பிருந்தா

- **பாடத்தின் தன்மை** : தன்னை அறிதல் பற்றி விளக்குவதால், தனித்த வகையைச் சார்ந்தது.
- **கற்கும் முறை** : ஆசிரியர் பாடலைச் சந்த நயத்தோடு பாட அதனைக் கேட்டு மாணவர்கள் தானே கற்றல்.

துணைக் கருவிகள்

- மகளுக்குச் சொன்ன கதை – நூல்
- விளக்கப்படம்
- ஒலிபெருக்கி
- மடிக்கணினி

பாட அறிமுகம்

- சே. பிருந்தா புகழ் பெற்ற பெண் கவிஞர்களுள் ஒருவர்.
- படைப்புகள்: மழை பற்றிய பகிர்தல்கள், வீடு முழுக்க வானம், மகளுக்குச் சொன்ன கதை.

வாசித்தல்

நூல்வெளிப் பகுதியினை ஆசிரியர் வாசித்துக் காட்ட மாணாக்கர்கள் தனித்தனியே வாசித்தல் மேற்கொள்ளுதல்.

கற்றல் திறன்கள்

- புதியச் சொற்களை அடிக்கோடிடல்.
- அகராதி கொண்டு பொருள் அறிந்து எழுதுதல்.

மனவரைபடம்

தன்னை அறிதல்

காக்கைக்குக் கூட்டில் - குயில் குஞ்சு - குயில் குஞ்சைப் போகச் சொல்லல் - செல்ல முடியவில்லை - மரத்தில் வாழ்தல் - 'கா' என்று கத்த முயற்சித்தல் - முடியவில்லை.

கூடுகட்டத் தெரியாது - அம்மா - அப்பா - தோழர் - குளிர் - மழை - வெயில் - கடந்தல் - இரை தேடுதல் - குயில் குஞ்சு 'கூ' என கூவுதல் - குயில் என உணர்தல்

தொகுத்தல்

- காக்கைக்குக் கூட்டில் உள்ளது காக்கைக் குஞ்சு அல்ல, குயில் குஞ்சு தான் என்று ஒருநாள் தெரியவந்தது.
- எனவே, இனி நாம் சேர்ந்து வாழ முடியாது என்று கூறி குயில் குஞ்சைப் போகச் சொன்னது.
- அதனால் தாய் காக்கையை விட்டுச் செல்ல முடியவில்லை. அந்த மரத்திலேயே வாழ ஆம்பித்தது. 'கா' என்று கத்த முயற்சித்தது, அதனால் முடியவில்லை.
- அதற்குக் கூடுகட்டத் தெரியாது. அம்மா , அப்பா , தோழர் யாரும் இல்லை. குளிர், மழை, வெயில் ஆகியவற்றைக் கடந்தது. தானே இரை தேடத் தொடங்கியது. வாழ்க்கையை வாழப் பழகிவிட்டது.
- ஒரு விடியலில் குயில் குஞ்சு 'கூ' என்று கூவியது, அன்று தான் ஒரு 'குயில்' என உணர்ந்தது.

வழங்குதல்

மனவரைபடக் கருத்துகளைக் குழுவினில் வழங்கி, ஒட்டு மொத்த தொகுத்தல் செய்தல்.

வளரறி மதிப்பீடு (அ)

- பாடலைச் சந்த நயத்துடன் பாடுதல்.
- காட்சி படம் வரைந்து வருதல்.
- தன்னம்பிக்கை பற்றிய கவிதைகள் எழுதி வருதல்.

வளரறி மதிப்பீடு (ஆ) - வினாத்தாள்

மதிப்பெண்: 10 காலம்: 10 நிமிடம்

அ. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (4)

1. கூடுகட்டத் தெரியாத பறவை ------.

அ) காக்கை ஆ) குயில்
இ) சிட்டுக்குருவி ஈ) தூக்கணாங்குருவி

2. 'தானொரு' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ------.

அ) தா + ஒரு ஆ) தான் + னொரு
இ) தான் + ஒரு ஈ) தானே + ஒரு

3. 'தன்னை அறிதல்' கவிதை இடம்பெறும் நூல் ------.

அ) மழை பற்றிய பகிர்தல்கள் ஆ) வீடு முழுக்க வானம்
இ) மகளுக்குச் சொன்ன கதை ஈ) எதுவுமில்லை

4. குயில் ------ ன் கூட்டில் முட்டையிட்டது.

அ) காக்கை ஆ) குருவி
இ) குயில் ஈ) புறா

ஆ. குறுவிடை தருக. (6)

1. காக்கையின் கூட்டில் முட்டையிட்டது எது?
2. காக்கையைப் போலக் கரைய முயன்றது எது?
3. தன்னை அறிதல் என்ற கவிதையின் உட்பொருள் யாது?

★★★★★

மனவரைபடம்

ஒத்துழையாமை இயக்க - காந்தியடிகள் - இளைஞர்களுக்கு அழைப்பு - காயிதேமில்லத் - விடுதலை உணர்வு.

காயிதேமில்லத்

தமிழ்மொழி - முதன் முதல் - திராவிட மொழிகள் - இலக்கியச் செறிவு - மிகப்பழமையான மொழி - காயிதேமில்லத்.

காயிதேமில்லத் - மகன் - திருமணம் - ஆடம்பரம் - மக்கள் நினைத்தல் - மணக்கொடை இன்றி - எளிமையாக

தொகுத்தல்

- நாடு முழுவதும் விடுதலைப் போராட்டத்தில் மக்கள் ஈடுபட்டுக் கொண்டிருந்த காலத்தில், ஒத்துழையாமை இயக்கத்தில் பங்கு கொள்ள காந்தியடிகள் இளைஞர்களுக்கு அழைப்பு விடுத்தார்.
- காந்தியடிகளின் இத்தகைய வேண்டுகோள் காயிதேமில்லத்தின் மனதில் விடுதலை உணர்வை ஏற்படுத்தியது.
- கல்வியை விட நாட்டு விடுதலை மேலானது என்று எண்ணி ஒத்துழையாமை இயக்கத்தில் கலந்து கொண்டார்.
- காயிதேமில்லத் அவர்கள் தன் மகனுக்குத் திருமணம் செய்ய முடிவு செய்தார்.
- பெரிய தலைவர் என்பதால் திருமணம் மிகவும் ஆடம்பரமாக நடக்கும் என அனைவரும் நினைத்தனர்.
- பெண் வீட்டாரிடம் மணக்கொடை வாங்காமல் மிக எளிமையாக மகன் திருமணத்தை நடத்தினார்.
- ஆட்சிமொழி தேர்வு செய்யும் கூட்டத்தில் காயிதேமில்லத், “பழமையான மொழிகளில் ஒன்றைத்தான் ஆட்சி மொழியாக்க வேண்டும் என்றால், அது தமிழ்மொழி என்று தான் நான் உறுதியாகச் சொல்வேன். மண்ணிலே முதன் முதலாகப்

பேசப்பட்ட மொழி திராவிட மொழிகள் தான். அவற்றுள் இலக்கிய செறிவு கொண்ட தமிழ்மொழி தான் மிகப்பழமையான மொழி. அதனைத் தான் நாட்டின் ஆட்சிமொழியாக அறிவிக்க வேண்டும்'' என்று குறிப்பிட்டார்.

வழங்குதல்

மனவரைபடக் கருத்துகளைக் குழுவினில் வழங்கி, ஒட்டு மொத்த தொகுத்தல் செய்தல்.

வலுவூட்டல்

